# தமிழ் இணையக் கல்விக்கழகம்
## சென்னை – 600 025.

## இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)
## இரண்டாம் பருவம்

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2020**

## C031 தமிழகப் பண்பாட்டு வரலாறு

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

### பிரிவு – 1

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களிடம் உள்ள பொதுப்பண்பாட்டுக் கூறுகளை வரையறுக்க.
2. சிந்து சமவெளி நாகரிகத்தில் கழிவு நீர் அகற்றும் முறை குறித்து சர்ஜான் மார்சல் கூறியது என்ன?
3. யாருடைய எந்தக் கூற்றைப் பொய்யாக்க இளங்கோவடிகள் துறவறம் பூண்டார்?
4. இந்திய ஒன்றியத்துள் முளைத்த புரட்சிகரமான சிந்தனை எது?
5. அலர் தூற்றுதல் என்றால் என்ன?
6. திருவள்ளுவர் குறிப்பிடும் இசைக்கருவிகள் யாவை?
7. பெரியாழ்வாரின் கனவில் திருமால் கூறியது என்ன?
8. தீபாவளி எவ்வாறு தோற்றம் பெற்றது?
9. கருணையில்லா ஆட்சி கடுகி ஒழிக – யாருடைய ஆட்சி? பாடியவர் யார்?
10. பெரியார் எதனை விருந்தினர் கடமை என்று குறிப்பிட்டார்?
11. தமிழ்ப்பண்பாட்டில் ஏற்பட்ட மாபெரும் இழப்பு எது?
12. அரசின் பல்துறைகளில் பணியாற்றிய பணியாளர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?

13. ஏறு சாத்து, இறங்கு சாத்து என்றால் என்ன?
14. கிணறு தோண்டுவதைப் பற்றிய பண்டையத் தமிழ் நூலின் பெயர் என்ன?
15. இசுலாமிய வணிகக் குழு எவ்வாறு அழைக்கப்பட்டது?

## பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக. (5x3=15)**

1. தமிழர்களின் பழக்க வழக்கங்களுள் மிகச் சிறந்தவையாக மார்க்கோ போலோ குறிப்பிட்டுள்ளவற்றை விளம்புக.
2. தமிழரின் வீரம் குறித்து இயம்புக.
3. மனத்தூய்மை குறித்து திருவள்ளுவர் கூறுவனவற்றை விளக்குக.
4. தெய்வ வடிவங்களைச் செய்யும்பொழுது சிற்பிகள் கடைபிடித்த நெறிமுறைகளைக் குறிப்பிடுக.
5. திருமலைநாயக்கர் மண்டபம் குறித்து எழுதுக.
6. தமிழ்பண்பாட்டில் ஆரியத்தின் தாக்கம் குறித்துக் கூறுக.
7. குகைக் கல்வெட்டுகள் குறித்து எழுதுக.
8. கோயில்கள் வாயிலாக நடந்த அறப்பணிகளை எழுதுக.

## பிரிவு – 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக. (3x15=45)**

1. (அ) தமிழ்ப் பண்பாட்டில் தனிக்கூறுகளும் கூட்டுவடிவங்களும் குறித்து எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) தமிழ் இலக்கணமும் தமிழ்ப் பண்பாடும் என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.

2. (அ) தமிழரின் சமயப் பண்பாட்டின் சிறப்புகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) ஐம்பெருங்காப்பியங்கள் வெளிப்படுத்தும் தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகள் என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வரைக

3. (அ) ஐரோப்பியர் வருகைக்குப் பின் தமிழர் பண்பாட்டில் நிகழ்ந்துள்ள மாற்றங்களைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) தமிழரின் நீர் மற்றும் நில மேலாண்மை குறித்து விளக்கியுரைக்க.

❋ ❋ ❋